| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **191/2016** |
| **DATE** | : | **28.10.2025** |
| **பெயர்** | : | **கருணாமூர்த்தி** |
| **தந்தை பெயர்** | : | |

**பி.வா. சா.1 வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. வாதி ரேவதியை நான் இதற்கு முன்பு பார்த்தது இல்லை. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்து தனது என்று பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் 496/1பி12, 1 ஏக்கர் 74 செண்ட். அந்த 1 ஏக்கர் 74 செண்ட் ஆதியில் மாணிக்கம் என்பவருக்கு சொந்தமானது. மாணிக்கம் எனது பாட்டனார் ஆவார். மாணிக்கம் தற்போது உயிருடன் இல்லை, 1996ல் இயற்கை எய்தினார். எனது பாட்டி பெயர் நாகம்மாள் அவர் தற்போது உயிருடன் இல்லை, அவர் எனது தாத்தாவிற்கு முன்பே இறந்துவிட்டார். அவர்களது இறுதி சடங்கில் நான் பங்கேற்றேன். எனது தாத்தா பாட்டி அவலூரில் இறந்தார்கள். அவர்கள் இறக்கும் போது நான் அதே ஊரில் தான் இருந்தேன். நான் அந்த ஊரில் அப்போது கிடையாது, அந்த ஈமச்சடங்கில் அப்போது நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

2. மாணிக்கத்திற்கு டேனியல், சண்முகம், நாகன், ஜெயா, கேசவன் என்ற மகன்களும் அமிர்தம், ருக்கு, மஞ்சுளா என்ற மகள்களும் இருந்தனர். மேற்படி 5 மகன்களும் இறந்துவிட்டனர், ருக்கு மற்றும் அமிர்தம் இறந்துவிட்டனர், மஞ்சுளா தற்போது உயிருடன் உள்ளார். டேனியல் 2005ல் இறந்துவிட்டார். எனது பதிலுரையிலும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலும் டேனியல் 1995ல் இறந்ததாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரியல்ல. டேனியல் எனது தந்தை ஆவார். நான் டேனியலின் மகன் என்பதை காண்பிப்பதற்கான வாரிசு சான்றிதழ் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

3. சண்முகம் எனது தந்தைக்கு பிறகு இறந்துவிட்டார் எப்போது என்ற வருடம் தெரியவில்லை. நாகன் எப்போது இறந்தார் என்று தெரியாது. அவர்கள் இருவரும் அவலூரில் இறந்துவிட்டனர். வாதி வழக்கு தாக்கல் செய்த போது இடைக்கால உறுத்துக் கட்டளை கோரி மனு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி மனுவின் பதிலுரையை நான் தாக்கல் செய்துள்ளேன் அந்த பதிலுரை சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அதில் உள்ள கையெழுத்தை அவர் ஒப்புக் கொண்டார். ஆனால் எப்போது எதற்காக கையொப்பம் இட்டது என்று தெரியவில்லை என்று குறிப்பிட்டார். மேற்படி இடைக்கால மனுவில் வாதிக்கு ஆதரவாக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கக்கட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவிற்கு எதிராக நான் மேல் முறையீடு செய்துள்ளேன் என்றால் வீட்டு மனை சம்மந்தமாக மேல் முறையீடு செய்துள்ளேன். மேற்படி மேல் முறையீடு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.